## 2025.08.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. தீர்மானம்மிக்க தேசிய தகவல் உட்கட்டமைப்பு வசதிகளை பேணி செல்கின்ற அரச நிறுவனங்கள் தேசிய இணையவழிப் பாதுகாப்பு நடவடிக்கை நிலையத்துடன் தொடர்புபடுத்தல்

அரச நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற இணையவழித் தாக்குதலகள் காரணமாக குறித்த நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறுகள் ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் நிலவுகின்றன. அத்துடன், தனிப்பட்ட மற்றும் கூருணர்வுமிக்க தரவுகள் வேறு தரப்பினர்களிடம் சென்றடைதல், பிரஜைகளின் தனிப்பட்ட பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு, பொருளாதார உறுதிப்பாடு, பொதுச் சுகாதாரம் மற்றும் சமூக நல்லாரோக்கியம் போன்றவற்றுக்கும், அரச நிறுவனங்கள் தொடர்பாக பொதுமக்களிடமுள்ள நம்பிக்கைக்கு மோசமான முறையில் பாதிக்கின்றது. அதனால், இவ்வாறான அச்சுறுத்தல்கள் மற்றும் இடர்களைக் குறைப்பதற்காக இலங்கை கணணி அவசரப் பதிலளிப்பு நிறுவனம் (CERT) மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேசிய இணையவழிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய இணையவழிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலையத்தின் மூலம் 24 மணித்தியாலயங்கள் தொடர்ச்சியாக இவ்வாறான இணையவழித் தாக்குதல்களைக் கண்காணித்தல், அடையாளங் காணல், மற்றும் பதில்வினையாற்றுதல் போன்ற எந்தவகையிலான தீமைபயக்கும் மென்பொருட்களால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் அனுமதியின்றிய நுழைவுகளை அடையாளங் கண்டு அறிவுறுத்தல் போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய, தேசிய இணையவழிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலையத்துடன் இணைந்து அதன் தொழில்வாண்மை சேவைகளை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் நிறுவனப் பிரதானிகளுக்கும் விதிமுறைகளை வழங்குவதற்காக டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. விவசாயிகளுக்கான உரமானியத்தை டிஜிட்டல் முறையில் நடைமுறைப்படுத்தல்

அரசு விவசாயிகளுக்கு உரமானியத்தை வழங்கும் போது அந்தந்த விவசாயிகளுக்கு குறித்த மானியத்தை சரியான நேரத்தில் கிடைக்கின்றமையையும், குறித்த நிதியுதவியை தமது விவசாய நடவடிக்கைகளுக்கான உரத் தேவைக்காக முழுமையாகப் பயன்படுத்துகின்றமையை உறுதிப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதனால், குறித்த பின்னூட்டல் செயற்பாட்டுக்கு வசதியளித்து விவசாயிகளுக்கு உர விநியோகத்தை மிகவும் முறைசார்ந்த வகையிலும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்காக QR குறியீடு அல்லது பொருத்தமான முறையொன்றைப் பயன்படுத்த வேண்டியமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, உரமானிய வேலைத்திட்டத்திற்குப் தகைமை பெறுகின்ற அனைத்து விவசாயிகளும் விவசாய விடயதான அமைச்சின் கீழ் பிரதேச செயலாளர்கள் மூலம் அடையாளங் காண்பதற்கும், அவ்வாறு தகைமை பெறுகின்ற விவசாயிகளுக்கு உரமானியத்தை வழங்குவதற்கும் QR முறைமை அல்லது பொருத்தமான டிஜிட்டல் பொறிமுறையை உருவாக்குவதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக கௌரவ



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

ஜனாதிபதி அவர்களும் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. விவசாய மற்றும் கைத்தொழில் துறையில் இளைய தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான சலுகைக் கடன் திட்ட முறைமையை அறிமுகப்படுத்தல்.**

முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக சலுகை அடிப்படையிலான நிதி வசதிகள் இன்மையால் விவசாயத்துறையில் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு தடைகள் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலைமை விவசாயத் துறையில் இளைய தொழில்முயற்சியாளர்களின் கவர்ச்சி குறைந்துள்ளதுடன், தரிசு நிலங்களின் அளவு அதிகரிப்பதற்கும், உணவு உற்பத்தி குறைந்து செல்வதற்கும் காரணமாக அமைகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அதனால் 2025 வரவு செலவு திட்ட முன்மொழிவின் பிரகாரம் விவசாயம் மற்றும் கைத்தொழில் துறையில் ஈடுபடுகின்ற தொழில்முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கான சலுகைக் கடன் திட்ட முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக 500 மில்லியன் ரூபாய்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் 05 வருட காலத்துக்கு நடைமுறைப்படுத்துவதுடன், பயனாளி ஒருவருக்கு உயர்ந்தபட்சம் 05 மில்லியன் ரூபாய்கள் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த சலுகைக் கடன்திட்ட முறையின் கீழ் பயனாளிகளிடம் அறவிட வேண்டிய வட்டி, எஞ்சியுள்ள கடன்தொகைக்கு வருடாந்தம் 4% வீதமாகும். அதற்கமைய 05 வருடங்களில் விவசாய தொழில்முயற்சியாளர்கள் 50,000 பேரை உருவாக்குகின்ற அரசின் நோக்கத்தை அடைவதற்கு இயலுமாகும் வகையில் சலுகைக் கடன்திட்ட முறைமையை இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து நடைமுறைப்படுத்துவதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பெல்வத்த மற்றும் செவனகல சீனி கைத்தொழிற்சாலை அமைந்துள்ள வளாகங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சுற்றுலாத் துறையை கவர்ச்சி மிக்கதாக உருவாக்கும் நோக்கில் அபிவிருத்திச் செய்யும் கருத்திட்டம்.**

அரச தனியார் பங்குடைமை தேசிய முகவராண்மை நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவளக் கற்கையின் விதந்துரைகளின் அடிப்படையில் சுற்றாடல் நேயம்மிக்க சுற்றுலாத்துறை (Eco tourism), விவசாய சுற்றுலாத்துறை (Agro tourism), உடல் ஆரோக்கிய சுற்றுலாத்துறை (Wellness tourism) மற்றும் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத்துறை (Conservation based tourism) ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி பெல்வத்த சீனி தொழிற்சாலை வளாகத்தில் தேர்ந்தெடுக்கபட்ட 04 இடங்களை சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடிய இடமாக அபிவிருத்திச் செய்வதற்கு வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அத்துடன் செவனகல சீனி தொழிற்சாலை வளாகத்தில் அமைந்துள்ள ஒருசில இடங்களும் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனிக்குச் சொந்தமான பெல்வத்த சீனி தொழிற்சாலை மற்றும் செவனகல சீனி தொழிற்சாலை அமைந்துள்ள வளாகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களை சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடிய இடங்களாக மாற்றுவதற்கு அரச - தனியார் பங்குடைமை முறைமையின் கீழ் 02 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் கைத்தொழில் மற்றும்

தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. நிறுவனங்களின் பாதுபாப்பிலிருந்து சமூகமயப்படுத்தப்படுகின்ற இளைஞர் யுவதிகளுக்கான வீட்டு வசதிகளை வழங்குவதற்கான நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டம்.**

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பாதுகாப்பு வழங்கப்படுகின்ற சிறுவர்களை சமூகமயப்படுத்தும் போது திருமண எதிர்பார்ப்புடன் இருக்கின்ற இளைஞர் யுவதிகள், அதற்கான முறையான வகையில் தயார்படுத்தும் நோக்கில் நிரந்தரமானதும் பாதுகாப்பானதுமான வீடொன்றை அமைப்பதற்கு இயலுமாகும் வகையில் 01 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்குவதற்காக 2025 வரவு செலவு திட்டத்தின் கீழ் 1000 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த பணிக்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம், மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம், அபிவிருத்தி நிதித் திணைக்களம், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களை ஒருங்கிணைத்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அடையாளம் காணப்பட்டுள்ள அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் குழுக்களுக்கு நிதியுதவியை வழங்குவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்களும் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- 18 வயது பூர்த்தியடைந்தமையின் அடிப்படையில் கடந்த 10 வருட காலத்தில் (2015.06.30 திகதிக்கு) பின்னர் நிறுவன ரீதியான பாதுகாப்பிலிருந்து விடுபட்டு திருமணமாகியிருக்கின்ற அல்லது திருமண எதிர்பார்ப்புடன் இருக்கின்ற ஆனாலும் நிரந்தரமான பாதுகாப்பான வீடொன்று இல்லாத இளைஞர் யுவதிகள்
- தகுந்த குடும்பப் பின்னணி அல்லது வாழ்வாதாரம் இன்மையால் தொடர்ந்தும் சிறுவர் இல்லங்களில் தங்கியிருக்கின்ற 18 வயது பூர்த்தியடைந்த இளைஞர் யுவதிகள் (விசேடமாக பெண்கள்)

**06. மத்திய அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டத்தின் மூன்றாம் பகுதியின் (பொத்துஹர தொடக்கம் கலகெதர வரை) கட்டத்தின் மூன்றாவது பக்கேஜ் இற்கான ஒப்பந்தத்தை வழங்குதல்.**

பொத்துஹர தொடக்கம் ரம்புக்கன வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டத்தின் மூன்றாம் பகுதியின் முதலாவது கட்டம் 19 பக்கேஜ்களாக பிரிக்கப்பட்டுள்ளன. குறித்த நெடுஞ்சாலையின் முதலாவது கட்டம் (0+000 கி.மீ தொடக்கம் 13 +800 கி.மீ வரையான பகுதியை) இயக்கக்கூடிய வகையிலான மட்டத்திற்கு கொண்டுவருவதற்காக மேற்பரப்பு மண்ணடுக்கு தொடர்பான நடவடிக்கைகள் (Aggregate Base course), அஸ்போல்ட் கொங்கிறீட் இடல் (Asphalt concrete), வீதிக் குறியீடுகளை இடல், சமிக்ஞை பலகைகளை அமைத்தல், அதிவேக நெடுஞ்சாலை தொழிற்பாடுகளுக்கான கட்டிட நிர்மாணம் மற்றும் கட்டண அறவீடு தொகுதியை அமைத்தல் போன்ற எஞ்சிய வேலைகளை பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது. அதற்கமைய குறித்த பணிகளுக்காக நிர்மாண பக்கேஜ் 03 இன் கீழ் தேசிய போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்றுள்ள விலைமுறிகளை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்ட நிரந்தர பெறுகைக்

குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில் குறித்த அனைத்து பக்கேஜ்களுக்கான கணிசமான பதிலளிப்புக்களை சமர்ப்பித்துள்ள குறைந்தபட்ச விலைமனுதாரரான மாகா இஞ்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் இற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. பரந்தன் - கரைச்சி – முல்லைத்தீவு (A035) வீதியின் வட்டுவாகல் பாலத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குதல்**

வட்டுவாகல் பாலம் என அழைக்கப்படும் பரந்தன் - கரைச்சி – முல்லைத்தீவு (A035) வீதியின் 50/1 ஆம் இலக்க பாலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் களப்புக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் இறுதியாக திருத்தப்பட்டுள்ள குறித்த பாலம் தற்போது பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. அதனால், வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் இருவழிப் பாதையுடன் கூடிய புதிய பாலமாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக, தேசிய போட்டி விலைமனுக் கோரல் முறைமையின் அடிப்படையில் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளுக்கமைய, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s RR Construction (Pvt) Limited இற்குகுறித்த பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. குறிஞ்சாத்தீவு (ஆனையிறவு வடக்கு) உப்பளத்தை மீண்டும் ஆரம்பித்தல்**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த குறிஞ்சாத்தீவு (ஆனையிறவு வடக்கு) உப்பளத்தின் உற்பத்தி மற்றும் தொழிற்பாடுகளை அரச - தனியார் பங்குடமை முறைமையின் கீழ் ஆரம்பிப்பதற்காக உள்நாட்டு முதலீட்டாளர்களிடம் முன்மொழிவு விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும், அதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு இயலாமல் போயுள்ளது. அதனால், குறிஞ்சாத்தீவு (ஆனையிறவு வடக்கு) உப்பளத்தின் உற்பத்தி நடவடிக்கைகளை அரச தனியார் பங்குடமை முறைமையின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பதற்காக சர்வதேச முன்மொழிவு விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. மீன் மற்றும் கடலுணவு உற்பத்திகளின் பாதுகாப்பு மற்றும் விலை உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான குளிரூட்டி அறைகளை புனரமைப்பு மற்றும் திருத்தம் செய்தல்**

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான குளிரூட்டி அறை வசதியானது, தெற்காசியாவில் அமைந்துள்ள பாரிய குளிரூட்டி வசதிகளாகக் காணப்பட்டாலும், கடந்த காலங்களில் பராமரிப்புக்கள் இன்மையால், முகாமைத்துவப் பலவீனங்களால் தற்போது குளிரூட்டிக் களஞ்சியம் செயலிழந்து போயுள்ளது. அதனால், 200 மெற்றிக்தொன் கொள்ளளவுடைய குளிரூட்டி அறை மற்றும் 2.5 மெற்றிக்தொன் கொள்ளளவுடைய அதியுயர் குளிரூட்டி அறையை துரிதமாகத் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் புனரமைப்புச் செய்வதற்குத்

திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த திருத்த வேலைகளுக்காக 86 மில்லியன் ரூபாய்கள் செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கீட்டை முகாமைத்துவம் செய்து குளிரூட்டி அறையின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. (397 அத்தியாயமான) 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

இலங்கை வங்கியின் மூலதனக் கட்டமைப்பை விரிவுபடுத்தல், அனுமதிக்கப்பட்ட கருமங்களை விரிவாக்கம் செய்தல், வங்கியின் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்களைப் பலப்படுத்தல் போன்ற பணிகளை நிறைவேற்றும் வகையில் (397 அத்தியாயமான) 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2024.07.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங் கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருமங்களுக்கு சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. குறித்த திருத்தப்பட்ட சட்டமூலத்தைத் திருத்தம் செய்தல் தொடர்பாக சமகால அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 1942 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தேசிய நூதனசாலை கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

அரும்பொருட்களைப் பாதுகாத்தல், அரும்பொருட்கள் தொடர்பான தவறுகள் மற்றும் தண்டனைகளை நிர்ணயித்தல், அரும்பொருட்களைச் சேகரித்தல் போன்ற பணிகளில் பொருட்களை வகைப்படுத்தல்களுக்கான அளவுகோல்களை அறிமுகப்படுத்தல், புதிய அரும்பொருட் காட்சியகங்களை அமைத்தல், தற்போதுள்ள அரும்பொருட் காட்சியகங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், அரும்பொருட் காட்சியக விடயதானத்தை விரிவுபடுத்தல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்களைப் பலப்படுத்தல் போன்ற நோக்கங்களுடன் கூடிய தற்போது வலுவிலுள்ள 1942 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தேசிய நூதனசாலை கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக திருத்தங்களை அடையாளங் காணல் மற்றும் அதற்குத் தேவையான தொழிநுட்பத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் துறைசார் நிபுணர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, குறித்த நிபுணர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில் 1942 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தேசிய நூதனசாலை கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

ஏற்றுமதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகித்த இலங்கை விஞ்ஞான சேவைகள் விசேடதர அதிகாரியான செல்வி. ஏ.பீ.பீ. திஸ்னா அவர்கள் தற்போது அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அதற்கமைய, தற்போது குறித்த திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக (ஆய்வு) கடமையாற்றுகின்ற இலங்கை விஞ்ஞான சேவைகள் விசேடதர அதிகாரியான திருமதி. எம்.கே.எஸ்.ஆர். டீ. சமரசிங்க அவர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிப்பதற்கு கமதொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**